# COPY OF DEPOSITION

(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**Case No. C C No.77/2011 Date.15.07.2019**

**பெயர்- பழனிசாமி த/பெ செல்லப்பன் (PW4)**
**மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். லட்சுமி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் லட்சுமி எனக்கு தெரியாது. அன்பழகனை எவ்வாறு தெரியும் என்றால் அவர் எலக்ட்ரீசியன் வேலை செய்வதால் பழக்கம். சம்பவ இடத்திலிருந்து என் வீடு எவ்வளவு துரத்தில் உள்ளது என்றால் 4 வீதி தள்ளி உள்ளது. அன்பழகன் எங்கு குடியிருக்கிறார் என்றால் இந்திரா வீதியில் குடியிருக்கிறார். சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து கையெழுத்திட்டேன் என்றால் சம்பவத்தன்றே கையெழுத்திட்டேன். அப்போது நேரம் எவ்வளவு இருக்கும் என்றால் மதியம் 12.30 இருக்கும். எதிரி சிராசுதீன் எங்கு குடியிருக்கிறார் என்றால் தெரியாது. அக்கம் பக்கத்தில் குடியிருந்தவரை கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நகை காணாமல் போன லட்சுமி அவர்களின் வீட்டில் எதிர்புறத்தில் யார் குடியிருக்கிறார் என்ற விவரம்தெரியாது. யாருடைய வீடுகள் அக்கம் பக்கத்தில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நகை காணாமல் போனதை எத்தனை மணி நேரம் தேடிப்பார்த்தார்கள் என்றால் அவர் நகை கழற்றி விட்டு குளிக்கே சென்று விட்டுவரும்போது நகை காணாமல் போனது என்று கூறினார். எங்கு வைத்தார் என்றால் தெரியாது. அதன்பின்னர் அன்பழகனுக்கு தகவல் தெரிவித்தார் என்றால் சரிதான். அதன்பிறகு தான் காவல்நிலையத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், அன்பழகன் எனக்கு தெரிந்தவர் என்பதல் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கும் எதிரிக்கும் முன்விரோதம்இருந்த காரணத்தினால் எதிரி மீது அவர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த சம்பவமும்நடக்கவில்லை என்றும் அதனால் தான் சாட்சிகள் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல.